*2018 ஜூன் 25]*

*வேண்டும். அதாவது,* mat, *துண்டு போன்றவற்றையும் உற்பத்தி செய்வதற்கு ஆணை பிறப்பித்தால், இச்சங்கங்கள்மூலம் அதிகப்படியான வேலைவாய்ப்புகளை பெண்களுக்கு வழங்க ஏதுவாக இருக்கும். எனவே, இதனைச் செய்வதற்கு நமது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, இங்கே பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதற்கான நடவடிக்கைகள் கோ–ஆப்டெக்ஸ்மூலம் எடுக்கப்பட்டு வருகின்றன. எந்த ஒரு தேக்கமும் இல்லாத நிலையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 205, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**205—**

### வீட்டுமனைப் பட்டா

***37921—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:**

*மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*எழும்பூர் தொகுதி, 104–வது வார்டு, சாஸ்திரி நகரில் வசிப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தமிழ்நாட்டில் ஏழையெளியோருக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை எளிதில் கிடைத்திடச் செய்திடவும், மாண்புமிகு*

இதய தெய்வம் அம்மா அவர்களின் இலட்சிய கனவை நனவாக்குகின்ற வகையிலேயும் (மேசையைத் தட்டும் ஒலி) AIIMS மருத்துவமனையைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து, மதுரை தோப்பூரில் அமைத்திட முயற்சிகள் பல செய்து, சத்தமில்லாமல் சாதனைகள் பல படைத்து வருகின்ற சாதனைச் செம்மல், பாசமிகு அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றிக்கு உறுதுணையாக இருந்து வழிகாட்டி வருகின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், ஒட்டுமொத்தமாக ஏழரைக் கோடி தமிழர்களுடைய சார்பிலே கோடானு கோடி நன்றியைக் காணிக்கையாக்கி, இத்திட்டத்தை தாயுள்ளத்தோடு தமிழ்நாட்டிற்குத் தந்திட்ட மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் சட்டமன்றத் தொகுதியிலே, எழும்பூர் வட்டத்திற்குட்பட்ட 104–வது வார்டில் உள்ள சாஸ்திரி நகரில், எழும்பூர் கிராமம் புல எண் 463/2 மற்றும் புல எண் 463/4 சாஸ்திரி நகர், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய திட்டப் பணியின்கீழ் மனைப் பிரிவு அங்கீகரிக்கப்பட்டு, நில உரிமை மாற்றம் செய்ய அரசாணை எண் 182, வருவாய்த் துறை, நாள் 17–5–2018 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அப்பகுதி மக்களுக்குத் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் விற்பனைப் பத்திரம் வழங்கப்பட்ட பின்னர், வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 104–வது வார்டு, சாஸ்திரி நகரில் உள்ள மக்களுக்கு, 28–5–1988 அன்று 585 வீடுகளும், அதனையொட்டியுள்ள கொய்யா தோப்பைச் சார்ந்தவர்களுக்கு 25 வீட்டுமனைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1998 ஆம் ஆண்டே, ஏறக்குறைய 350–க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு

*2018 ஜூன் 25]*

*குடிசை மாற்று வாரியத்தின்மூலம் 'தடையில்லா சான்றிதழ்'* (NOC) *வழங்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில், அங்குள்ள 585 வீடுகளின் ஒதுக்கீடுதாரர்களுக்கும், மேலும், அதையொட்டியுள்ள கொய்யா தோப்பைச் சார்ந்த 25 வீடுகளின் ஒதுக்கீடுதாரர்களுக்கும் அரசு, உடனடியாகப் பட்டாக்களை வழங்க முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு இலவசமாக நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது. அந்த வகையிலேதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தத் திட்டத்திற்கு முன் நுழைவு அடிப்படையிலே*—enter—upon *என்று சொல்லக்கூடிய முன் நுழைவு அடிப்படையிலே—அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதற்கு நில உரிமை மாற்றம் செய்ததற்குப் பிறகுதான் அவர்கள் விற்பனைப் பத்திரம் தருவார்கள்; அதற்குப் பிறகு வீட்டுமனைப் பட்டாக்கள் தரப்படும். 2018–ல் தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில்தான் அரசாணை வெளியிடப்பட்டிருக்கின்றது. ஆகவே, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் விற்பனைப் பத்திரம் தந்ததற்குப் பிறகு, அந்தப் பகுதியில் குடியிருக்கும் எஞ்சியவர்களுக்கும் வீட்டுமனைப் பட்டாக்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.*

**திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே, எனது கன்னிப்பேச்சின்போதும், அதனைத் தொடர்ந்து தங்களால் எனக்கு வழங்கப்பட்ட துணைக் கேள்வி மூலமாகவும் வைத்த கோரிக்கையின் அடிப்படையிலும், கடந்த பிப்ரவரி மாதம் நில நிருவாக ஆணையாளர் திரு. ஜெயக்கொடி, இ.ஆ.ப., அவர்களை நேரடியாகச் சந்தித்து, அவரிடம் மனு அளித்ததன் அடிப்படையிலும், இந்த அரசானது*

அரசாணையை வெளியிட்டிருக்கின்றது. அதனை நான் வரவேற்கின்றேன்.

அதேபோல், எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 58—வது வார்டு, நேவல் மருத்துவமனை சாலையில் உள்ள 50 வீடுகளுக்கும், 61—வது வார்டு, பூபதி நகரில் 50 ஆண்டுகளுக்குமேல் உள்ள 65 வீடுகளுக்கும், 61—வது வார்டு, ரங்காச்சாரி தெருவில் உள்ள 60 வீடுகளுக்கும், 77—வது வார்டு, டிமளஸ் ரோடு, குமாரசாமி ராஜாபுரத்திலுள்ள 63 வீடுகளுக்கும், 77—வது வார்டில் உள்ள 338 வீடுகளுக்கும், 107—வது வார்டு, எம்.எஸ். நகர்ப் பகுதியில் 50 ஆண்டுகளுக்கும்மேல் உள்ள 118 வீடுகளுக்கும், 107—வது வார்டு, ஜெகந்நாதபுரம், 6—வது தெருவில் 50 ஆண்டுகளுக்குமேல் இருக்கக்கூடிய 65 வீடுகளுக்கும், பட்டா வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், என்னுடைய எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில், சிறு, சிறு பகுதிகளில் ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கும்மேல், அதே இடத்தில் தங்களுடைய குடும்பத்தினருடன் வசித்து வருகின்ற மக்களுக்குப் பட்டாக்கள் கிடைக்காமல் இருந்துவரும் நிலையில், தொடர்ந்து அவர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் பட்டாக்களை வழங்க வேண்டுமென்று இந்த அரசினைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் உள்ள நலிந்த பிரிவினர்களுக்கு, அவர்களுடைய முன்னேற்றத்திற்கு அடிப்படையாக வசிப்பதற்கு ஓரிடம். அதைத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கொள்கையாகக் கொண்டிருக்கின்றது. பொதுவாக, இதுபோன்ற மாநகரப் பகுதிகளிலே, நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், குடிசை மாற்று வாரியத்திற்கு நிலம் ஒதுக்கீடு செய்து, அவர்கள் மூலமாக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி, அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குகிறோம். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்குப் பல்வேறு பகுதிகளிலே நாம் வழங்கிக் கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, ஆட்சேபகரமற்ற புறம்போக்குகளில் குடியிருப்பவர்களுக்கு, வரன்முறை செய்கின்ற அந்தப் பணிகளும், கணக்கெடுக்கும்

*2018 ஜூன் 25]*

*பணிகளும் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே, 12 முறை வரன்முறை செய்கின்ற அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, வரன்முறை செய்யக்கூடிய பணிகளும், கணக்கெடுக்கும் பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றன. தேவையான நேரங்களில் அந்தத் திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்படுத்தி, ஆட்சேபகரமற்ற புறம்போக்குகள் மற்றும் நீர்நிலையற்ற புறம்போக்குகளில் குடியிருப்பவர்களுக்கு அரசாணை நிலை எண் 21—ன்கீழ் உள்ள வரன்முறைகளுக்குட்பட்டு, வீட்டுமனைப் பட்டாக்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

*முற்பகல் 10—40*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்கு சென்னை மாநகரத்தில் பல இடங்களில் பட்டா வழங்கப்படாத நிலை இருக்கிறது. உதாரணமாக, வருவாய்த் துறைக்குட்பட்ட என்னுடைய கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் இருக்கக்கூடிய ஜி.கே.எம். காலனியில் 4,500 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்றும் ஒதுக்கீடுதாரர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்க முடியாத நிலை இருக்கிறது. இதற்குக் காரணம் கேட்டால், வேறு துறைகளுக்குச் சொந்தமான நிலங்களைக் கையகப்படுத்தி, சம்பந்தப்பட்ட நிலங்களை குடிசை மாற்று வாரியத்திற்கு துறப்பு செய்யாததால், பட்டா கிடைக்காமல் இருக்கின்றது என்று செய்தி வந்திருக்கின்றது. சென்னையில் மட்டும், கிட்டத்தட்ட முப்பதுக்கும் மேற்பட்ட திட்டப் பகுதிகளில் பட்டா வழங்கப்படாத நிலை இருக்கின்றது. அதனால் அந்த இடத்தினுடைய உரிமையாளர்கள் தங்களுடைய சொந்தப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் தவித்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, சம்பந்தப்பட்ட நிலங்களை குடிசை மாற்று வாரியத்திற்கு மாற்றம் செய்து, பட்டா வழங்கக்கூடிய அந்த முயற்சியில் உடனடியாக இந்த அரசு ஈடுபட வேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது உண்மைதான். பொதுவாக, குடிசை மாற்று வாரியத்திற்குட்பட்ட திட்டங்கள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதால், அந்தத் திட்டத்தினுடைய அவசியம் கருதி, முக்கியத்துவம் கருதி, நில உரிமை மாற்றம் செய்வதற்கு முன்பாகவே முன்நுழைவு அனுமதி என்று சொல்லக்கூடிய enter-upon permission கொடுக்கப்படுகிறது. எந்தத் துறைக்கு அந்த நிலம் சொந்தமோ—வருவாய்த் துறைக்குச் சொந்தம் என்று சொன்னால், முன்நுழைவு அனுமதி பெற்று, நில உரிமை மாற்றம் செய்யாமலேயே அவசியம் கருதி, அந்தத் திட்டங்கள் உடனடியாகச் செயல்படுத்தப்படுகின்றன. உடனடியாக அந்தக் குடியிருப்புக்கும் அந்தத் திட்டம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், பட்டா இல்லை என்கின்ற காரணத்தினால் எந்தவிதமான தொந்தரவும் அவர்களைச் செய்வது இல்லை. ஆனால், நில உரிமை மாற்றம் செய்ததற்குப் பிறகுதான் குடிசைமாற்று வாரியத்தினால் அவர்களுக்கு விற்பனைப் பத்திரம் வழங்க முடியும். விற்பனைப் பத்திரம் பெற்றதற்குப் பிறகுதான் அவர்களுக்குப் பட்டா வழங்க முடியும் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட நன்கு அறிவார்கள். ஆகையினால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன திட்டங்கள் உட்பட, இதுபோன்று நிலுவையில் இருக்கக்கூடிய திட்டங்களையெல்லாம் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும். பட்டாக்களை விரைவாக வழங்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், இன்றைக்குப் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு, வருவாய்த் துறைக்குக் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். வருவாய்த் துறையின் சார்பில் எந்தெந்த இடங்களிலெல்லாம் இதுபோன்று குடிசை மாற்று வாரியத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றதோ, ஏற்கெனவே முன்நுழைவு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்ற அடிப்படையிலும்கூட, தகுதியான பயனாளிகள் அங்கே இருக்கின்றார்களா என்பதைப் பார்க்க வேண்டும். ஏனென்றால் அன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற நிலத்திற்கு இன்றைக்கு விலை மதிப்பு உயர்ந்திருக்கிறது. ஆகவே, முன்நுழைவு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய பயனாளிகள் அங்கே

*2018 ஜூன் 25]*

*இருக்கின்றார்களா என்பதை ஆராய்ந்து, விலை மதிக்கமுடியாத அந்த நிலங்கள் ஏழைகளுக்குச் சொந்தமாக ஆக வேண்டும் என்ற அந்த அடிப்படையில்தான் கணக்கெடுக்கும் பணி, ஆய்வுப் பணி ஆகியவற்றில் இரண்டு துறைகளும் இணைந்து செயல்படுகின்றன. நம்முடைய வீட்டு வசதித் துறை மற்றும் வருவாய்த் துறைகளின் சார்பில் தொடர் ஆய்வுக் கூட்டங்கள் உயர் அலுவலர்கள் தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதற்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியிலும் விரைவாகப் பட்டா வழங்குவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

**திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் வட்டம், தாராசுரம், பெருமாண்டி, வளையப்பேட்டை மற்றும் கும்பகோணம் ஒன்றியம் மற்றும் நகரப் பகுதிகளில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழை மக்கள் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள். குறிப்பாக, சேஷம்பாடி ஊராட்சி, முப்பருதி கிராமத்தில் கும்பகோணம் அருள்மிகு சாரங்கபாணி திருக்கோயிலுக்குச் சொந்தமான 65 ஏக்கர் நஞ்சை நிலத்தை பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இடம்மாற்றி, சுமார் 35 இலட்சம் ரூபாய் செலவில் மண்ணடித்து, தூர்த்து, இடம் மேடாக்கப்பட்டு, வீடு கட்டுவதற்கு ஏற்றவாறு சமப்படுத்தி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டப்பட்டிருக்கின்றது. அது நத்தம் பகுதியாகவும் வகைமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறள் பெயரில் திருக்குறள் நகர் என்று பெயரிடப்பட்டு, ஒரு குறளுக்கு ஒரு வீடு என்ற வகையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிட தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் பணிகள் நடைபெற்று வந்தன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்*

*இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் பணியினை விரைவுபடுத்தி, அங்குள்ள 1,330 பயனாளிகளுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட ஆவன செய்வாரா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் (நிலை) ஆணை எண் 21–ன்கீழே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, 'அந்த நிலம், நத்தம் நிலமாக வகைப்பாடு* (classification) *செய்யப்பட்டிருக்கிறது; அங்கு குடியிருப்புகள் கட்டுவதற்கு ஏற்ற வகையிலே அந்த இடம் மண் கொட்டி மேடாக அமைக்கப்பட்டிருக்கிறது' என்கிற கருத்தையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தகுதியுடைய இடங்கள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது என்று சொன்னார்கள். ஏழையெளியோருடைய வாழ்வில் ஒளியேற்றுவதற்காக இதுவரையில் 20 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கிய ஒரே அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தத் திட்டத்திலே என்ன சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது? ஏன் அந்தப் பணி நிறுத்தப்பட்டிருக்கிறது; அல்லது ஏன் பின்தங்கியிருக்கிறது என்பது குறித்து உடனடியாக ஆய்வு மேற்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தி, அங்கு தகுதியுள்ள பயனாளிகள் வருவாய் (நிலை) ஆணை எண் 21–ன்கீழே வரையறைக்குட்பட்டு வருவார்களேயானால், உடனடியாகப் பட்டாக்கள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*